# யொன்சி (Yonzhi)

**வசிப்பிடம்:** வடமேற்கு சீனாவின் சிங்ஹாய் (Qinghai) மாநிலத்தில் கிட்டத்தட்ட தொடர்புகொள்ளமுடியாத ஒரு பகுதியில் நாடோடி மேய்ப்பர்களான 3,000 யொன்சிக்கள் வசிக்கின்றார்கள். திபெத்திய மொழியில் செப் சு (Cheb Chu) எனப்படும் பட்டணத்திற்கு அருகில் உள்ள ஹஹா சன் (Heha Chen) பள்ளத்தாக்கு இவர்களுடைய முக்கிய வசிப்பிடமாகும். யொன்சிக்கள் வசிக்கும் பகுதி மஞ்சள் நதிக்குக் கிழக்கில் கொங்ஹா (Gonghe) மாவட்டத்தில் உள்ளது. எல்லாத் திபெத்தியர்களாலும் புனிதமானதாகக் கருதப்படும் வியப்புக்குரிய ஆனி மாசென் (Anye Machen) மலைத்தொடர் யொன்சிக்கள் வாழும் பகுதிக்குக் கிழக்கில் உள்ளது. இதன் உயரமான சிகரம் மாசென் காங்ரி (Machen Gangri –6,282 மீட்டர்கள்) ஆகும். குறுகிய கோடைக்காலங்களில் இப்பகுதி அழகிய பூக்களால் உயிர் அடைகிறது. ‘நீல மற்றும் சிவப்பு வர்ணங்களில் பிரகாசமான தொடப்படாத பூக்கள் பனிப் படுக்கையிலிருந்து தலைகளை உயர்த்திப் பார்த்தன...காட்சி கீழே இறங்க இறங்க இன்னும் அழகாக மாறியது. சிறிய புல்வெளிகள், மற்றும் ஊசி இலை மரங்களின் நடுவே உள்ள காலியிடங்கள் பூக்களால் நிறைந்து அற்புதமாகக் காட்சியளித்தன.’ யொன்சிக்கள் தாங்கள் வாழும் பகுதியை மலை ஆடுகள், மான்கள் மற்றும் ஓநாய்களோடும் பகிர்ந்துகொண்டுள்ளனர்.


Julian Hawken

**அடையாளம்:** யொன்சிக்கள் தொலைதூரப் பகுதியில் வசிக்கும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் சிறிதே மாற்றமடைந்த ஒரு தனித்துவமான இனமாவார்கள். சீன அரசாங்கம் இவர்களை ஒரு தனி இனமாக அங்கீகரிக்கவில்லை. இவர்கள் திபெத்தியர்கள் பட்டியலில் இணைக்கப்பட்ட கொலொக் இனத்தின் ஒரு பிரிவாகக் கருதப்படுகின்றார்கள்.

**மொழி:** யொன்சிக்கள் கொலொக் மொழியின் ஒரு வகையைப் பேசுகின்றார்கள். சீன மொழி ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும்.

**வரலாறு:** அநேகச் சந்ததிகளாக யொன்சிக்கள் வெளியுலகக் காரியங்களால் பாதிக்கப்படாத எளிய வாழ்க்கை நடத்துகின்றார்கள். ஜோசப் ராக் கி.பி. 1929 ல் எதேச்சையாக யொன்சிக்கள் வாழும் பகுதிக்கு சென்றார். அவர் இவ்வாறு நினைவுகூறுகிறார் ‘இவர்கள் எங்களுடைய குழுவைப் பார்த்து வியப்படைந்தார்கள். ஒருவர் கேட்டார் “ எங்களுடைய பகுதிக்கு வர எதற்கு இந்தப் படை மற்றும் ஆயுதங்கள்?” நாங்கள் பள்ளத்தாக்கைக் கடந்து யொன்சிக்களின் தெய்வமாகிய மலையின் அடிவாரத்திற்கே சென்றோம். கடைசியாக நாங்கள் கடந்த சில கூடாரங்கள் வியாதியின் நிமித்தம் ஒதுக்கப்பட்டவை என மேய்ப்பர்கள் கூறினார்கள். கூடாரத்திலிருந்தவர்கள் யாக் மயிரினால் மூடப்பட்டு மரிக்கும் நிலையில் படுத்திருந்தார்கள்.’

**பழக்கவழக்கங்கள்:** யொன்சிக்கள் யாக் மயிரினால் செய்யப்பட்ட கூடாரத்தில் வாழும் நாடோடி மேய்ப்பர்களாவார்கள். இவர்கள் தங்களுடைய செம்மறியாடுகள், ஆடுகள் மற்றும் யாக்களுக்குப் புல் தேடி சில வாரங்களுக்கு ஒருமுறை இடம் பெயர்கின்றார்கள்.

**மதம்:** திபெத்திய புத்த மதத்தோடுகூட யொன்சிக்கள் மலைத் தெய்வமான ஆனி மாசென்னையும் வழிபடுகிறார்கள். யொன்சிக்கள் அருகில் உள்ள ஆனி மாசென் மலையில் அதே பெயருடைய தெய்வம் இருப்பதாக நம்புகிறார்கள். இந்தத் தெய்வம் வலது கையில் சூரியன் மற்றும் வானவில்லையும் இடது கையில் சந்திரனையும் பிடித்துக்கொண்டு வெள்ளைக் குதிரையின் மேல் சவாரி செய்வதைப்போலச் சித்தரிக்கப்படுகிறது. எல்லாத் திபெத்தியர்களும் ஆனி மாசென்னை வழிபடுகிறார்கள். ஒவ்வொரு புத்த மடமும் இதன் சிலை அல்லது சித்திரத்தை கொண்டுள்ளது. ஆனி என்றால் “முதியவன்” எனப் பொருள்படும் இது “புனிதர்” என்ற சொல்லுக்குச் சமமானது. மா என்றால் “மயில்” என்றும் மற்றும் சென் என்றால் “உயர்ந்த” என்றும் பொருள்படும்.

**கிறிஸ்துவம்:** யொன்சி சீனாவின் சென்றடைய முடியாத இனங்களில் ஓர் இனமாகும். இவர்களுடைய பகுதி வருடம் முழுவதும் பனியால் மூடப்பட்டுள்ளது, பூஜ்யத்திற்குக் கீழ் 40°C வெப்பநிலை இங்கு நிலவுகிறது. யொன்சிக்கள் அடிக்கடி கூடாரத்தோடும் கால்நடைகளோடும் இடம் பெயர்கின்றார்கள். இவர்களுடைய சமுதாயங்களை நடைப் பயணம் அல்லது குதிரை சவாரி மூலம் மட்டுமே சென்றடையமுடியும். யொன்சிக்களுக்குச் சுவிசேஷம் ஒரு சொல்லப்படாத செய்தியாக இருக்கிறது.




**Population:**
3,270 (2000)
4,030 (2010)
4,950 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

**மேலோட்டம்:**

**மற்ற பெயர்கள்:**

**மக்கள்தொகை:** 3,000 in China (1996, Asian Minorities Outreach)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய,ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, வட திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 0

**திபெத்திய புத்தமதம்:** 60%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : இல்லை

**கிறிஸ்துவத்தின் நிலை**




சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்